19-03-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 25.01.1994

பிராமணர்களின் இயல்பு விசேஷத் தன்மையின் இயல்பு - இதை இயற்கையான நினைவு சொரூபமாக ஆக்குங்கள்

இன்று பாப்தாதா தன்னுடைய அனைத்து விஷ்வத்தின் விசேஷ ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். நாடகத்தின் அனுசாரம் ஆத்மாக்களாகிய உங்களுடைய நடிப்பு எவ்வளவு விசேஷமானதாகப் பதிவாகியுள்ளது. இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தை யின் விசேஷத்தன்மைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து ஆஹா குழந்தாய் என்ற அன்பின் பாடல் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டு இருந்தது. கூடவே, குழந்தைகளுடைய உள்ளத்தில் இருந்து இந்த ஆஹா ஆஹா என்ற பாடல் சதா ஒலிக்கிறதா? ஒவ்வொரு கர்மத்தில், ஒவ்வொரு அடியில், ஒவ்வொரு சங்கல் பத்தில் இந்த சிரேஷ்டமான அனுபவம் ஏற்படுகிறதா அல்லது அவ்வப்போது ஏற்படு கிறதா? சாதாரண வாழ்க்கை என்பது அல்லாமல் விசேஷமான வாழ்க்கை எனும் அனுபவம் சதா தானாக ஏற்படுகிறதா? அல்லது நினைவை கொண்டு வருவதனால் அனுபவம் ஆகிறதா? என்பதை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். வாழ்க்கை என்பது உள்ளது என்றாலே அந்த வாழ்க்கை என்பதன் அர்த்தம் சதா இருப்பது மற்றும் தானாக இருப்பது என்பதாகும். நினைவில் கொண்டு வந்ததால் அனுபவம் ஏற்பட்டது மற்றும் நினைவில் கொண்டு வராததால் விசேஷத் தன்மைக்கு பதிலாக சாதாரண வாழ்க்கையாக அனுபவம் ஆகிறது - இது விசேஷ ஆத்மாக் களாகிய உங்களுடைய விசேஷத்தன்மை கிடையாது. பிராமணப் பிறப்பே விசேஷ பிறப்பு ஆகும். யாருடைய பிறப்பே விசேஷமானதோ, அவர்களுடைய வாழ்க்கை என்னவாக இருக்கும்? விசேஷமானதாக இருக்குமா அல்லது சாதாரணமானதாக இருக்குமா? பிராமணப் பிறப்பும் சிரேஷ்டமானது, பிராமண தர்மமும் சிரேஷ்டமானது மற்றும் பிராமண கர்மமும் சிரேஷ்டமானது. ஏனெனில், பிராமணப் பிறப்பின் வள்ளல், பிராமண தர்மத்தின் ஸ்தாபகர், சர்வ சிரேஷ்டமான பரம ஆத்மா மற்றும் ஆதி ஆத்மா பிரம்மா பாபா ஆவார்கள். எனவே, எவ்வாறு படைப்பாளர்கள் சர்வ சிரேஷ்டமானவர்களோ, அதுபோல் படைப்பும் சர்வ சிரேஷ்ட மானது அதாவது விசேஷமானது. பிராமணர்களுடைய கர்மம் விசேஷமானதாக ஏன் உள்ளது? ஏனெனில், கர்மத்தில் பின்பற்றுவதற்காக உங்கள் அனைவருக்கும் முன்னால் ஆதி ஆத்மா பிரம்மா பாபா உதாரணமாக இருக்கின்றார். கர்மத்தில் சாகார பிரம்மா பாபாவைப் பின்பற்று கின்றீர்கள், ஆகையினால், பாக்கிய விதாதா அதாவது கர்மத்தின் மூலம் பாக்கிய ரேகையை சிரேஷ்டமானதாக ஆக்கக்கூடிய பிரம்மா பாபா என்று புகழப்பட்டு இருக்கின்றார். பாக்கியத்தின் ரேகையை வரையும் பேனா கர்மம் ஆகும். எனவே, சிரேஷ்ட கர்மத்தின் சகஜமான சின்னம் பிரம்மா பாபா ஆவார். ஆகையினால், நீங்கள் அனைவரும் விசேஷமான முயற்சியின் வார்த்தை யாக பாபாவிற்கு சமமாக ஆகவேண்டும் என்றே வர்ணிக்கின்றீர்கள்.

இந்த அவ்யக்த வருடத்தில் அனைவருடைய இலட்சியம் என்னவாக இருந்தது? நிராகாரி ஸ்திதியில் நிராகார தந்தைக்கு சமமாக அசரீரி ஸ்திதியினுடைய

அனுபவம் செய்தீர்களா? சாகார கர்மத்தில் பிரம்மா பாபாவிற்கு சமமாக ஆகுவதில் வரிசைக்கிரமமாக அனுபவம் செய்தீர் களா? விசேஷ வாழ்க்கையின் ஆதாரம் விசேஷ பிறப்பு, தாரணை மற்றும் சிரேஷ்ட கர்மம் ஆகும். எவ்வாறு லௌகீக வாழ்க்கையில் கூட ஒருவேளை, ஏதாவதொரு ஆத்மாவின் பிறப்பு விசேஷமாக இராஜா குடும்பத்தில் இருந்ததென்றால், இராஜ குமாரராகவோ அல்லது இராஜ குமாரியாகவோ இருப்பார்கள். இந்த விசேஷத் தன்மையானது, பிறவி கிடைத்ததன் காரணத்தினால், நான் இராஜகுமாரி என்ற நினைவு ஒவ்வொரு சமயமும் சதா மற்றும் தானாகவே இருக்குமா அல்லது அடிக்கடி நினைவில் கொண்டு வருவார்களா? சகஜமான நினைவு இருக்கும் அல்லவா. முயற்சி செய்கிறார்களா என்ன? தன்னுடைய விருப்பத்தின் காரணத்தினால் எப்படிப்பட்ட சாதாரண கர்மம் செய்தாலும் தன்னுடைய பிறப்பின் விசேஷத்தன்மையை மறந்துவிடு வார்களா என்ன? இயற்கையானதாக (நேச்சுரல்) மற்றும் இயல்பான தன்மையாக (நேச்சர்) ஆகிவிடுகிறது. எனவே, பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய இயல்பு என்ன? விசேஷமானதா அல்லது சாதாரணமானதா? இப்பொழுதும் கூட சில சில குழந்தைகள் எப்பொழுது சாதாரண கர்மம் செய்கின்றார்களோ, அப்பொழுது பாப்தாதா விற்கு முன்பு தன்னை குற்றமற்றவர் என்று நிரூபிப்பதற்காக என்ன கூறுகின்றார்கள்? இந்த கர்மம் செய்ய வேண்டும் என்று நான் விரும்பவில்லை, ஆனால், என்னுடைய இயல்பாக இருக்கிறது, அதனால் நடந்து விட்டது என்று கூறுகின்றார்கள். அப்படி இவர்கள் கூறுவது அல்லது சிந்திப்பது யதார்த்தமானதா? நான் யார்? பிராமண வாழ்க்கை வாழ்பவர் அல்லவா. இது என்னுடைய இயல்பான தன்மை என்று பிராமண வாழ்க்கை வாழக்கூடிய ஆத்மா, இம்மாதிரி சிந்திக்க முடியுமா? இப்படி கூறுவது சரியா? எனில், அந்த நேரத்தில் ஏன் சொல்கின்றீர்கள்? அந்த சமயம் பிராமணன் சொல்வதில்லை, மாயா சொல்கிறது. எவ்வாறு இந்த சாதாரண இயல்பு அல்லது மாயையினுடைய இயல்பு, தானாகவே இயற்கையாக காரியம் செய்துவிடுகிறது அல்லவா. ஆகையினால், விரும்பவில்லை, ஆனால் நடந்துவிட்டது என்று கூறுகின்றார்கள். ஆகையினால், பிராமணருடைய இயல்பு அதாவது விசேஷத் தன்மை என்ற இயல்பானது இயற்கையானதாக இருக்க வேண்டும். இயற்கையான பொருள் எதுவோ, அதுவே சதா இருக்க முடியும். எனவே, விசேஷ வாழ்க்கையினுடைய நினைவு இயல்பான ரூபத்தில் இயற்கை யானதாக இருக்க வேண்டுமா அல்லது சில நேரம் மறந்துவிடுகிறது, சில நேரம் நினைவு வருகிறது, இப்படி இருக்க வேண்டுமா? எனவே, சதா நினைவு சொரூபத்தில் இருங்கள். நினைவைக் கொண்டு வருபவர்கள் அல்ல, நினைவு சொரூபமாக இருப்பவர்கள். அவ்யக்த வருடமானது நேரத்தின் அனுசாரம் முடிவடைந்துவிட்டது, ஆனால், பாப்தாதாவிற்கு சமமாக தன்னை சம்பன்னம் ஆக்கியிருக்கின்றார்களா? என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருந்தார் கள். அவ்யக்தம் என்றால் ஃபரிஷ்தா சொரூபம் ஆகவேண்டும் மற்றும் ஆக்க வேண்டும் என்று இந்த அவ்யக்த வருடத்தில் விசேஷ இலட்சியம் வைக்கப்பட்டு இருந்தது. அனைவரும் இதே இலட்சியம் வைத்திருந்தீர்கள் தானே, பிறகு, ரிசல்ட் என்ன வந்தது? தன்னைத் தானே சோதனை செய்தீர்களா? ஃபரிஷ்தா பவ என்ற வரதானம் கூட வரங்களை வழங்கும் வள்ளல் மூலம் கிடைத்திருக்கிறது. எனவே, வரதானம் மற்றும் இலட்சியம் ஆகிய இந்த இரண்டினுடைய நினைவினால் எந்தளவு வெற்றியை அனுபவம் செய்திருக்கின்றீர்கள் என்ற இந்த சூட்சும சோதனையை தனக்குத் தானே

செய்தீர்களா? அல்லது அவ்யக்த வருடம் முடிந்துவிட்டது, அவரவர் சக்திக்கேற்ப எவ்வளவு அனுபவம் கிடைத்திருக்கிறதோ, அவ்வளவே நாடகத்தின் அனுசாரம் சரியாக இருந்தது என்று நினைக்கின்றீர்களா? வருடத்தின் மாற்றத்தின் கூடவே சுய மாற்றத்திற்கான நிலை என்னவாக இருந்தது - இந்த விதிப்படி சோதனை செய்தீர்களா? எப்படி வருடம் முடிவடைந்ததோ அப்படி சுயத்தின் இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் சம்பன்னம் ஆகியுள்ளீர்களா அல்லது இந்த வருடத்தில் ஆகிவிடுவோம் என்று நினைக்கின்றீர்களா? சமயம் மற்றும் சுயத்தின் வேகம் சமமாக இருந்ததா? சமயத்தை விட சுயத்தின் வேகம் தீவிரமாக இருக்க வேண்டும், ஏனெனில், சமாப்திக்கான சமயத்தைக் கொண்டு வருவதற்கு விசேஷ ஆத்மாக்களாகிய நீங்கள் நிமித்த மானவர்கள். தீவிர வேகத்தோடு வருடமோ முடிவடைந்து விட்டது. வருடம் எப்படி முடிவடைந்தது என்பது தெரிந்ததா? எனவே, விசேஷ ஆத்மாவாகிய என்னுடைய மாற்றத்தின் வேகம் தீவிரமாக இருந்ததா அல்லது சில நேரம் தீவிரமாகவும், சில நேரம் நடுத்தரமாகவும் இருந்ததா என்று சோதனை செய்திடுங்கள்.

ஃபரிஷ்தா என்றால் பழைய சமஸ்காரம் மற்றும் உலகத்தோடு தொடர்பு இல்லாதவர்கள். பழைய உலகத்தினுடைய ஏதாவதொரு கவர்ச்சி, அது சம்பந்தமாக இருக்கலாம் அல்லது தன்னுடைய தேகத்தின் பக்கம் கவர்ச்சி அல்லது யாராவது ஒரு தேகதாரி மனிதன் பக்கம் கவர்ச்சி, ஏதாவதொரு பொருள் மீது கவர்ச்சி எத்தனை சதவிகிதம் இருந்தது என்பதை சோதனை செய்திடுங்கள். அப்படிப்பட்ட பழைய சமஸ்காரத்தினுடைய கவர்ச்சி, அது சங்கல்பத் தின் ரூபத்திலோ, விருத்தியின் ரூபத்திலோ, வார்த்தையின் ரூபத்திலோ, சம்பந்தம், தொடர்பு அதாவது கர்மத்தின் ரூபத்திலோ எத்தனை சதவிகிதம் இருந்தது? ஃபரிஷ்தா என்றால் டபுள் லைட். எனவே, உண்மையான ஒளி சொரூபம் நினைவு சொரூபத்தில் எந்தளவு இருந்தேன்? கூடவே, லைட் என்றால் இலேசான தன்மை, சுயத்தினுடைய மாற்றத்தின் புருஷார்த்தத்தில் எந்தளவு லைட் அதாவது இலகுவாக இருந்தேன்? மனம் அதாவது சங்கல்ப சக்தியில் வீணானதை சக்திசாலியானதாக மாற்றம் செய்வதில், அதாவது வீணானதின் சுமையை இலேசாக ஆக்குவதில் எந்தளவு வெற்றி அடைந்திருக்கின்றேன்? இவ்விதமாக வீணான சமயம், வீணான தொடர்பு, வீணான சூழ்நிலை - இந்த அனைத்திலும் மாற்றம் கொண்டு வருவதில் எந்தளவு இலேசாக இருந்தேன்? பிராமண பரிவாரத்தினுடைய சம்பந்தத்தில், சேவையினுடைய சம்பந்தத்தில் எந்தளவு இலேசாக இருந்தேன்? ஃபரிஷ்தா நிலையின் தீவிர வேகத்தினுடைய ஸ்திதி என்று இதைத் தான் கூறப்படுகிறது. இந்த விதியின்படி சோதனை செய்திடுங்கள் மற்றும் எதிர்காலத்திற்காக மாற்றம் அதாவது பரிவர்த்தனை செய்திடுங்கள். தன்னுடைய பிராமண வாழ்க்கையினுடைய விசேஷத் தன்மையை நேச்சுரல் நேச்சராக ஆக்க வேண்டும், இதைத் தான் சகஜ புருஷார்த்தம் என்று கூறப்படுகிறது. நான் விசேஷ ஆத்மா ஆவேன் என்ற இந்த ஒரு நினைவு சொரூபத்தில் மட்டும் நிலைத்துவிடுங்கள், அப்பொழுது தந்தைக்கு சமமாக ஆகுவது என்பதை மிகவும் சகஜமாக அனுபவம் செய்வீர்கள். ஏனெனில், நினைவு சொரூபத்தில் இருந்து சக்திசாலி சொரூபம் ஆகிவிடுகின்றீர்கள். வருடமோ முடிவடைந்து விட்டது. பாப்தாதா ரிசல்ட்டைப் பார்ப்பார்கள் அல்லவா. ரிசல்ட்டில் பெரும்பான்மையினர் முடிந்தளவு (அவரவர் சக்திக்கேற்ப) செய்தவர்கள்

மற்றும் முடிந்தளவு செய்த மெஜாரிட்டியில் (பெரும்பான்மையில்), சதா சக்திசாலியானவர்கள் மைனாரிட்டியாக (சிறுபான்மையாக) இருக்கின்றனர்.

நினைவு தினத்தைக் கூட மிகவும் அன்போடு கொண்டாடினீர்கள். இப்பொழுது விசேஷமாக எப்படி அன்போடு கொண்டாடினீர்களோ, அதுபோல் சினேகத்திற்கான நிரூபணம் தந்தைக்கு சமமாக நினைவு சொரூபம் ஆகியே தீரவேண்டும் என்பதாகும். ரிசல்ட் கேட்டீர்களா? அடுத்து என்ன செய்ய வேண்டும்? முந்தளவு சக்தி சாலியா அல்லது சதா சக்தி சொரூபமா? இந்த வருடத்தில் பெரும்பான்மையினர் சதா சக்திசாலி என்பதன் நிரூபணம் எந்தளவு கொடுப்பீர்கள்? என்று பார்க்கலாம். டீச்சர்கள் என்ன புரிந்திருக்கின்றீர்கள்? எந்த வரிசையில் வருவீர்கள்? சதா சக்திசாலி! டி.வி.யில் அனைவருடைய போட்டோ எடுக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும், எப்படிப்பட்ட சூழ்நிலையும் உருவாகட்டும், ஆனால், சதா சக்திசாலி. யார், யார் எந்தெந்தக் குழுவில் வந்துள்ளீர்கள்? என்று பெயர் குறிக்கப்பட்டுள்ளது அல்லவா. இப்பொழுது டீச்சர்களுடைய திருவிழா நடை பெற உள்ளது அல்லவா. அனைத்து டீச்சர்களுடைய அதுவரையிலுமான ரிசல்ட் என்னவாக இருக்கும்? யார் செய்வார்களோ, அவர்கள் எப்பொழுது என்று யோசிக்க மாட்டார்கள். திட சங்கல்பம் என்பதினுடைய அர்த்தமே இப்பொழுது என்பதாகும். சாதாரண சங்கல்பத்தினுடைய அர்த்தம் எப்பொழுதாவது நடந்துவிடும் என்பதாகும். எனவே, நீங்கள் எப்பொழுது என்று சொல்பவர்களா அல்லது இப்பொழுது என்று சொல்பவர்களா? சக்தி சேணை மிகவும் பெரிய சேணை ஆகும். எப்பொழுது என்று சொல்பவர்களா அல்லது இப்பொழுது என்று சொல்பவர்களா? பாண்டவர்கள் என்ன நினைக்கின்றீர்கள்? பாருங்கள், அனைவருடைய பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது பெயர் சொல்லமாட்டோம், இறுதியில் பெயர் அறிவிக்கப்படும் அந்த சமயமும் வந்துவிடும். புரிந்ததா!

அனைவரையும் விட அதிக எண்ணிக்கையில் எந்த ஜோனிலிருந்து வந்திருக்கின்றார்கள்? பஞ்சாப், இந்தூர் என்ன அதிசயம் செய்து காண்பிக்கப் போகின்றீர்கள்? என்று பார்க்கலாம். டீச்சர்கள் கூட அதிகம் வருகின்றீர்கள். எண்ணிக்கை அதிகமானால் டீச்சர்கள் கூட அதிகம் ஆகிவிடுகின்றனர்.பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் நம்பர் ஒன் எடுப்பீர்களா அல்லது இரண்டாவதில் வருவீர்களா? இந்தூர் கூட நம்பர் ஒன் எடுப்பீர்களா? மேலும், கர்நாடகம் என்ன செய்யப் போகின்றீர்கள்? என்ன நாடகத்தைக் காண்பிக்கப் போகின்றீர்கள்? கர்-நாடக் என்றால் ஹீரோ நாடகம் காண்பிக்க வேண்டும், இப்படி - அப்படி காண்பிக்கக் கூடாது. மேலும், மஹாராஷ்ட்ராவோ மகானாகத் தான் ஆவீர்கள் அல்லவா? மேலும், யூ. பி.யை (உத்திரப் பிரதேசம்) என்னவென்று கூறுவார்கள்? யூ. பி. யில் நதிகள் இருக்கின்றன அதாவது யூ.பி. என்றால் பதீதமானவர்களை பாவனம் (தூய்மையற்றவர்களை தூய்மை) ஆக்கக் கூடியவர்கள். தூய்மை ஆகுவது மற்றும் ஆக்குவதில் நம்பர் ஒன். எனவே, யூ.பி. யைச் சேர்ந்தவர்கள் கூட நம்பர் ஒன் ஆகுவீர்கள். இந்த சமயத்தில் யாருமே நம்பர் 2 என்று கூறமாட்டார்கள். இராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் தான் லக்கியானவர்கள் (அதிர்ஷ்டசாலிகள்), ஏனெனில், இராஜஸ்தானில் தான் சரித்திர பூமி உள்ளது. தலைமையகம் இராஜஸ்தானில் இருக்கிறது அல்லவா. எனவே, எங்கே தலைமையகம் உள்ளதோ, அது என்னவாக ஆகும்? தலைமை

(ஹெட்) ஆகும் அல்லவா. அனைவரும் குஷியோடு நாங்கள் நம்பர் ஒன் என்று கூறுகின்றீர்கள். ஆனால், அங்கே சென்று என்ன செய்வேன்..... செய்யவில்லை..... விரும்பவே இல்லை, ஆனால் நடந்துவிட்டது.... என்று கூறக்கூடாது. இப்பேற்பட்ட வார்த்தையை சிந்திக்கக் கூட கூடாது. நல்லது, இரட்டை அயல்நாட்டினர் கூட சேவையில் நன்றாக ஓட்டப்பந்தயம் செய்து கொண்டு இருக்கின்றீர்கள், மேலும், ஓட்டப்பந்தயத்தில் நம்பர் ஒன்னில் வர வேண்டும் அல்லவா. உள்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு தைரியத்தை ஏற்படுத்துவதில் வெளிநாடு நல்ல விதமாக நிமித்தம் ஆகியிருக்கின்றது. இந்த தைரியத்தைக் கொடுப்பதன் காரணத்தினால் அதிகப்படியான உதவியும் கூட கிடைக்கின்றது. புரிந்ததா! இதை நினைவில் வைத்து சகஜமாக முன்னேறிச் செல்லுங்கள் மற்றும் முன்னேற்றம் அடையச் செய்யுங்கள். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா சாகார பிரம்மா பாபாவின் சிரேஷ்ட கர்மங்களை பின்பற்றக் கூடிய கர்மயோகி ஆத்மாக்களுக்கு, சதா விசேஷத் தன்மையை இயற்கையானதாக மற்றும் இயல்பானதாக உருவாக்கக் கூடிய கோடியில் ஒரு சில ஆத்மாக்களுக்கு, சதா திடமான சங்கல்பத்தின் மூலம் விசேஷ பிறப்பு, தாரணை மற்றும் கர்மத்தின் நினைவு சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவினுடைய விசேஷத்தன்மை நிறைந்த அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடனான சந்திப்பு - பிராமணர்களாகிய நீங்கள் எந்தளவு சம்பன்னம் ஆகிக் கொண்டே செல்வீர்களோ, அந்தளவு எதிர்காலத்தில் இயற்கையும் கூட முன்னேற்றம் அடையும். ஏனென்றால், இயற்கை அவ்வப்போது தன்னுடைய சமிக்ஞையை காட்டிக் கொண்டு இருக்கிறது. எந்தளவு இயற்கையின் குழப்பம் இருக்குமோ, அந்தளவு ஆடாத ஸ்திதி இயற்கையை பரிவர்த்தனை செய்யும். எத்தனை ஆத்மாக்கள் அவ்வப்போது துக்கத் தின் அலையில் வந்துவிடுகின்றார்கள். அப்படிப்பட்ட துக்கமான ஆத்மாக்களுக்கான ஆதரவு அளிப்பவர்களோ தந்தை மற்றும் நீங்களே ஆவீர்கள். எனவே, இரக்கம் ஏற்படுகிறது அல்லவா. எப்பொழுது செய்தியைக் கேட்கின்றீர்களோ, அப்பொழுது உள்ளத்தில் என்ன வருகிறது? எதுவும் புதிதல்ல, தன்னுடைய ஆடாத அசையாத ஸ்திதிக்காக இது சரி தான் என்பது வருகிறது. ஆனால், இயற்கையினுடைய குழப்பத்தினால், எப்பொழுது அனைத்து ஆத்மாக் களும் கூக் குரலிடுகிறார்களோ, அப்பொழுது யாரை கூக்குரலிட்டு அழைக்கின்றார்கள்? எப்பொழுது கருணை, இரக்கத்தை கேட்கின்றார்களோ, அப்பொழுது அவர்களுடைய கருணையை வேண்டக்கூடிய கூக்குரல் உங்கள் அனைவரிடமும் வந்தடைகிறது அல்லவா! இவை சின்னச்சின்ன ஆபத்துக் கள் மற்றும் வேதனை அளிப்பவைகள். பிராமணர்கள் சம்பன்னம் ஆகுங்கள், அப்பொழுது துக்கமான உலகம் சம்பன்னம் ஆகிவிடும். கருணை வருகிறதா, இல்லையா? கருணை வருகிறது என்றால் பிறகு என்ன செய்கிறீர்கள்? பிறகும் கூட ஈஸ்வரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா. பரிவாரத்தின் எந்தவொரு துக்கத்தை யும் சுகமாக மாற்றம் செய்வதற் கான சங்கல்பம் வருகிறது அல்லவா. குடும்பத்தில் யாராவது நோய்வாய்ப்பட்டிருந்தால் கூட என்ன சங்கல்பம் வருகிறது? விரைவில் குணமடைந்து விடவேண்டும். கூச்சலிட்டு கதறி இறப்பது மற்றும் ஒரேயடியாக மாற்றம் அடைவது ஆகிய இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது அல்லவா. மகாவிநாசம் மற்றும்

விநாசத்திற்கான ஒத்திகை ஆகிய இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. மகாவிநாசம் என்றாலே மகான் மாற்றம். அதற்கு நிமித்தமானவர்கள் நீங்கள். சம்பன்னம் ஆனீர்கள் என்றால் சமாப்தி ஆகிவிடும். யார் குழப்பத்தில் இருக்கின்றார் களோ, அவர்கள் பிரத்யட்சத்தின் திரை விலக வேண்டும் என்று நினைக்கின்றார் கள். ஆனால், மேடையில் வரக்கூடிய ஹீரோ நடிகர் முழுமையாகத் தயார் ஆகவேண்டும் அல்லவா, அப்பொழுது தான் திரை விலகும். இல்லையெனில், பாதியிலேயே திரை விலகிவிடுமா? மாற்றத்திற்கான சுபபாவனையைத் தீவிரப்படுத்த வேண்டும் அதாவது தன்னை தீவிர வேகத்தில் சம்பன்னம் ஆக்கவேண்டும். நீங்கள் கூட சில நேரம் ஒரு மாதிரியாகவும், சில நேரம் வேறொரு மாதிரியாகவும் இருக்கின்றீர்கள் எனில் இயற்கையும் கூட சில நேரம் மிகவும் தீவிர வேகத்தில் காரியம் செய்கிறது, சில நேரம் மந்தமாகிவிடுகிறது. எனவே, இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? தனக்காகவோ அல்லது அனைத்து ஆத்மாக் களுக்காகவோ இரக்க பாவனையை (எமர்ஜ்) வெளிக் கொணருங்கள். இது நடக்கிறது தானே! அலையைப் பரப்புங்கள். கருணை பாவனையின் மூலம் தடைகள் கூட சகஜமாக சமாப்தி ஆகிவிடும். எங்கே கருணை இருக்குமோ, அங்கே எனது, உனது என்பதன் குழப்பம் இருக்காது. பூஜ்ய சொரூபம், கருணையை தாரணை செய்யுங்கள். சரி தானே. இப்பொழுது இந்த அலையைப் பரப்புங்கள். ஒவ்வொரு சங்கல்பத்திலும் கருணை நிறைந்தவர் ஆக வேண்டும். சங்கல்பத்தில் இருந்தது என்றால் பேச்சு மற்றும் செயல் அவ்வாறே ஆகிவிடும். அனைவரும் என்ன கூச்சலிடுகின்றார்கள்? கருணை காட்டுங்கள், கருணை காட்டுங்கள். நல்லது.

அவ்யக்த பாப்தாதாவுடனான தனிப்பட்ட சந்திப்பு - மாயாவின் நிழலிருந்து தப்பிப்பதற்கான சாதனம் - பாப்தாதாவினுடைய குடைநிழல்

சதா தன்னை பாப்தாதாவினுடைய குடைநிழலுக்குக் கீழே இருக்கக்கூடிய சதா பாது காப்பான ஆத்மாவாக அனுபவம் செய்கின்றீர்களா? சதா குடைநிழல் இருக்கின்றதா அல்லது சில நேரம் வெளியில் சென்றுவிடுகின்றீர்களா? இருந்தால் தந்தையின் குடைநிழல் இல்லை யென்றால் மாயாவின் நிழல். எனவே, மாயாவின் நிழலிருந்து தப்பிப்பதற்கான சாதனமாக இருப்பது குடைநிழல். எனவே, குடைநிழலில் இருக்கக் கூடியவர்கள் எவ்வளவு குஷியாக இருப்பார்கள், ஏனென்றால், கவலையற்ற சக்கரவர்த்தி ஆகிவிட்டார்கள் அல்லவா. கவலை இருக்கிற தென்றால் குஷி மறைந்துவிடுகிறது. எப்பொழுது வேண்டுமானாலும் பாருங்கள், குஷி மறைந்து விடுவதற்கான காரணம் என்ன? ஏதாவது ஏதாவது அமைதியின்மை, கவலை, சுமை ஆகியவை குஷியை மறையவைக்கிறது. மேலும், குஷி மறைந்துவிட்டது, பலவீனம் வந்துவிட்டது என்றால் மாயையின் நிழலினுடைய பிரபாவம் ஏற்பட்டுவிடுகிறது. பலவீனமானது மாயையை வரவேற்கிறது. எவ்வாறு சரீரத்தினுடைய பலவீனம் நோய்களை வரவழைக் கின்றதோ, அது போன்று ஆத்மாவின் பலவீனம் மாயையை வரவழைக்கின்றது. பிறகு, அந்த நிழலில் இருந்து வெளிவருவதற்கு எவ்வளவு உழைக்க வேண்டியிருக்கிறது. ஒருவேளை, கனவிலும் கூட மாயையின் நிழல் விழுகிறதென்றால் கனவு கூட தொந்தரவு செய்யும். பிறகு, பிராமணரி லிருந்து சத்திரியர் ஆகின்றீர்கள் என்றால் யுத்தம் செய்ய வேண்டியிருக்கும். சத்திரியரின் வாழ்க்கை கடின உழைப்பிற்கான வாழ்க்கை மற்றும் பிராமண வாழ்க்கை குஷி நிறைந்த வாழ்க்கை. இதில் எது பிடித்தமானது? சில நேரங்களில் யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறதா?

யுத்தம் செய்வது நன்றாக இருக்கிறதா? சிறிய வீண் சங்கல்பத்தின் நிழல் கூட எவ்வளவு உழைப்பை செய்விக்கிறது, ஆகையினால், சதா தந்தையினுடைய நினைவு என்ற குடை நிழலில் இருங்கள். நினைவு தான் குடைநிழல் ஆகும். எனவே, சதாகாலமும் குடை நிழலில் இருக்கத் தெரிகிறதா? சில நேரத்திற்காக அல்ல, சதா. தந்தை அழிவற்ற தந்தை அல்லவா. எனவே, ஆஸ்தியும் கூட சதாகாலத்திற்கானதைப் பெற வேண்டும். சதா குஷியில் இருக்கக் கூடியவர்கள். குடைநிழல் என்றால் குஷியாக இருப்பது. கவலையற்றவர்களாக இருப்பீர்கள் தானே? அனைத்து கவலைகளையும் தந்தைக்கு கொடுத்துவிட்டீர்களா அல்லது ஒன்றையோ, இரண்டையோ பத்திரமாக வைத்திருக்கின்றீர்களா? என்ன செய்வது....., எப்படி செய்வது....., இந்த வார்த்தைகள் கவலையினுடையதாகும். கவலையற்றவரின் வார்த்தைகள் சதா வெற்றிக்கானதாக இருக்கும். என்ன, எப்படி என்பது இருக்காது. எனவே, நாம் அனைவரும் தந்தையின் குடைநிழலில் இருக்கக் கூடியவர்கள் என்பதை சதா நினைவில் வைத்திடுங்கள். சுற்றுபவர்கள் அல்ல. சங்கல்பத்தில் கூட மயக்கம் வந்ததென்றால் மயக்கம் அடைந்தவர்கள் சுக்குநூறாகிவிடுவார்கள். நீங்களோ அமரர்கள் ஆவீர்கள் அல்லவா. அமரர் ஆகி விட்டோம் என்ற இந்த நினைவு சதா தன்னையும் கவலையற்றவராக மற்றும் பிறரையும் கவலையற்ற வராக ஆக்கிக்கொண்டே இருக்கும். எதை அடைய வேண்டுமோ அதை அடைந்துவிட்டேன் என்று சதா குஷியில் இந்த பாடலைப் பாடிக் கொண்டே இருப்பீர்கள். குழந்தை ஆகுவது என்றால் அடைவது. குழந்தை ஆனீர்கள் அதாவது அடைந்துவிட்டீர்கள். நல்லது!

வரதானம் : சர்வ ஆன்மிக பொக்கிஷங்களால் நிறைந்தவராகி சதா திருப்தியாக இருக்கக்கூடிய ஆல்ரவுண்டு சேவாதாரி ஆகுக.

ஆல்ரவுண்டு சேவாதாரி என்றால் மாஸ்டர் சுகத்தை வழங்கும் வள்ளல், மாஸ்டர் சாந்தியை வழங்கும் வள்ளல், மாஸ்டர் ஞானத்தை வழங்கும் வள்ளல் ஆவார்கள். வள்ளல் சதா சம்பன்ன மூர்த்தியாக இருப்பார். எப்படி சுயம் தான் இருப்பாரோ, அப்படியே பிறரையும் ஆக்குவார். ஆன்மிக சேவாதாரி என்றால் எவரெடி மற்றும் ஆல்ரவுண்டு. யார் சம்பன்னமாக இருக்கின்றார்களோ அவர்கள் தான் ஆல்ரவுண்டர் ஆகமுடியும், சம்பன்னமானவர்கள் தான் திருப்தியாக இருப்பார்கள் மற்றும் அனைவரையும் திருப்திப்படுத்துவார்கள். எவ்விதமான அபிராப்தியும் அதிருப்தியை உருவாக்குகிறது. சம்பன்னமாக மற்றும் வள்ளலாக ஆகுவதே திருப்தியாக இருப்பது மற்றும் திருப்திப்படுத்துவதற்கான விதியாகும்.

சுலோகன்: சுபபாவனை மற்றும் சுபமான விருப்பம் என்ற தங்கப் பரிசு கூடவே இருந்தது என்றால் எப்பேற்பட்ட ஆத்மாவையும் மாற்ற முடியும்.

குறிப்பு: இன்று மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை ஆகும். இராஜயோகி தபஸ்வி சகோதர, சகோதரிகள் அனைவரும் மாலை 6.30 முதல் 7.30 மணி வரை விசேஷ யோகப் பயிற்சி செய்யும் நேரத்தில், ஞான சூரியன் சர்வசக்திவான் பரமாத்மாவின் கிரணங்கள் என் மீது விழுந்து கொண்டிருக்கின்றன மற்றும் என்னிடமிருந்து முழு உலகத்திற்கும் சென்று கொண்டிருக்கின்றன, இதன் மூலம் உலகத்திலிருந்து அஞ்ஞான இருள் விலகிக் கொண்டே இருக்கிறது என்ற அனுபவம் செய்ய வேண்டும்.